இயக்கவூர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், நாகப்பட்டினம்
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.
**MCOP.No.64 /2025 எ.ம.சா. 1**

பெயர். திரு. ஜெய்சங்கர் த/பெ. கோபாலன்

கிராமம். மயிலாடுதுறை வயது. 56

நாள்.07.05.2026 தொழில். முதுநிலை கிளை மேலாளர்

நம்பர். 9487725940

**2026 –**ஆம் ஆண்டு மே மாதம் **07–**ந் தேதி **வியாழக்கிழமை** Act X of 1973 ஆண்டின் சட்ட விதிப்படி **திரு. G. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,** தலைமை நீதித்துறை நடுவர் நாகப்பட்டினம், ஆகிய என் முன்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் **3ம் நபர் மற்றும் 2ம் எதிர்மனுதார் நிறுவனத்தின் முதுநிலை கிளை மேலாளர்** ஆவேன். நான் எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் உண்மை என கூறப்பட்டவைதான். எனவே நான் தாக்கல் செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை சாட்சியமாக பாவித்துக்கொள்ள வேண்டுகிறேன். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு **இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சி தாக்கல் செய்த** முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலம் **எ.மசா.1ன்** முதல் விசாரணையாக அனுமதிக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ. 1 | 30.03.2026 | இரண்டாம் எதிர்மனுதாரர் தரப்பில் 1 ம் எதிர் மனுதாரருக்கும், அவரது ஓட்டுநர் பவித்திரன் என்பவருக்கும் அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு மற்றும் அஞ்சலக ரசீது | வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் மற்றும் அஞ்சலக ரசீதின் அசல். |

| | | | |
|---|---|---|---|
| எ.ம.சா.ஆ. 2 | -- | மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை 1ம் எதிர்மனுதாரர் பெற்றுக்கொண்டதற்கான அஞ்சலக Track Report | இணைய வழி சான்று |
| எ.ம.சா.ஆ.3 | 02.04.2026 | மேற்படி வழக்கறிஞர் அறிவிப்பை 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் பவித்திரன் எனபவர் பெற்றுக்கொள்ளாமல் Left without Instruction என்று திருப்பப்பட்டதற்கான அறிவிப்புடன் கூடிய பதிவு அஞ்சலக உறை | அசல் |
| எ.ம.சா.ஆ. 4 | 10.12.2024 | 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வறிக்கை | நகல் |
| எ.ம.சா.ஆ.5 | -- | 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்தின் காப்பீட்டு சான்றிதழ் | உண்மை நகல் |

மனுதாரரின் மனுவை 2ம் எதிர்மனுதாரரை பொறுத்து தள்ளுபடி செய்ய வேண்டுகிறேன்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**. இல்லை.

**மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**.

மனுதாரருக்கு விபத்து ஏற்படுத்திய 1ம் எதிர்மனுதாரர் வாகனம் விபத்து சமயத்தில் எங்களது 2ம் எதிர் மனுதாரர் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு, அந்த காப்பீடு அமுலில் இருந்தது என்று சொன்னால் சரிதான். மனுதாரர் விபத்து சமயத்தில் சாலைவிதிகளை அனுசரித்து கவனமுடன்தான் சாலையின் குறுக்கே கடந்து சென்றார் என்றும், நாங்கள் வழக்கிற்காக இழப்பீடு கொடுப்பதிலிருந்து தப்பிக்க வேண்டி, மனுதாரர் அஜாக்கிரதையாக சாலையின்

குறுக்கே வந்து விபத்தினை ஏற்படுத்திக்கொண்டதுபோல தவறாக சாட்சியமளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரரின் வாகன ஓட்டுநரின் அஜாக்கிரதை மற்றும் அதிவேகம்தான் காரணம் என்றும் அதனால்தான் அந்த ஓட்டுநர் மீத தலைஞாயிறு காவல் நிலைய குற்ற எண்.177/2024 u/s.281, 125(a) of BNS, 2023ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சொன்னால் சரிதான். அந்த முதல் தகவல் அறிக்கையானது தவறானது என சொல்லி எங்கள் நிறுவனத்தின் சார்பாக இதுவரை நாங்கள் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் சரிதான்.

விபத்திற்கு 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தின் ஓட்டுநர் காரணம் என்பதாலும், மேற்படி வாகனம் விபத்து சமயத்தில் எங்களது நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டு அமுலில் இருந்துள்ளதாலும், மனுதாரருக்கு இந்த விபத்தில் ஏற்பட்ட காயங்களுக்காக அவர் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகையை நாங்கள் செலுத்த கடமைப்பட்டுள்ளோம் என்று சொன்னால் 1ம் எதிர்மனுதாரர் வாகனத்தை ஓட்டிய ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால், நாங்கள் செலுத்த கடமைபட்டபவர்கள் அல்லார். அவ்வாறு இருப்பினும் காப்பீட்டு சட்ட விதிகள்படி நாங்கள் மனுதாரர் கோரியுள்ள இழப்பீட்டை செலுத்திவிட்டு அதனை 1ம் எதிர்மனுதாரரிடமிருந்து வசூலித்துக்கொள்ளவேண்டியது எங்களது கடப்பாடு என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது.

**மறுவிசாரணை இல்லை.**

G KRISHNAN Digitally signed by G KRISHNAN
Date: 2026.05.07 11:52:18 +0530